**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரிக்கை தீர்பாயம், சிறப்பு சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி.**

**M.C.O.P No.349-2025**

**தேதி : 21.01.2026** **PW-2**

| | |
|---|---|
| பெயர் : திரு. சதிஷ்குமார் | தொழில் : |
| த/பெ. : திரு. | வயது : |
| முகவரி : | |

**வாக்குமூலம் 1969ம் ஆண்டு பிரமாண சட்டம் (44 of 1969) படி திரு.வ.பிரஷ்னேவ்,எம்.ஏ., எல்.எல்.எம்., சிறப்பு சார்பு நீதிபதி, திருநெல்வேலி அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை :**

முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

**2 மற்றும் 3-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஏஷியன் ஷிப்பிங்கில் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன மாரிகுமார் என்பவர் என்ன உறவு முறை என்றால் என் நண்பரின் அப்பா ஆவார் அவர் எனக்கு நன்கு தெரிந்த நபர் ஆவார். மாரிகுமாருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த ரோடு கிழமேல் ரோடு பேரூர் – புதுக்கோட்டை செல்லும் ரோடு ஆகும். இருசக்கர வாகனத்தில் சென்றவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றார் என்றால் சரி. கிழமேல் ரோடு தென் வடல் ரோட்டில் இணைகிறதா என்றால் இணைகிறது. மாரிகுமார் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று திரும்பும்போது விபத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. லாரி எந்த திசையில் போனது என்றால் மாரிகுமாருக்கு முன்னாடி அதே ரோட்டில் மேற்கிலிருந்து

கிழக்காக சென்றுக்கொண்டிருந்தது. மாரிகுமாரின் இருசக்கர வாகனம் முன்னால் சென்ற லாரியின் இடது முன்பக்கத்தில் மோதி விபத்து நடந்தது என்றால் சரி. கிழமேல் ரோட்டில் விபத்து நடந்ததா அல்லது தென் வடல் ரோட்டில் விபத்து நடந்ததா என்றால் மேற்கிலிருந்து கிழக்கு செல்லும் ரோட்டில் விபத்து நடந்தது. லாரியின் இடது முன்பக்கத்தில் இருசக்கர வாகனம் எப்படி மோதியது என்றால் லாரி எங்கள் பின்னால் வந்துக்கொண்டிருந்தது பின்பு சைடு வாங்கி முந்தி சென்று இடது பக்கமாக திரும்பியதால் விபத்து நடந்தது. மாரிகுமார் அதிவேகமாகவும், கவனக்குறைவாக இடதுபுறமாக முந்தும்போது லாரியில் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் நான் கொடுக்கவில்லை என்றால் சரி. போலிசார் என்னை விசாரித்தார்கள். என் நண்பரின் அப்பா என்பதால் நண்பருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

BREZNEV V Digitally signed by BREZNEV V
Date: 2026.01.21 18:28:59 +0530

சிறப்பு சார்பு நீதிபதி,
திருநெல்வேலி.